# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சுய முன்னேற்றப் பயிலரங்கு

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) கடந்த ஒரு வருடமாக பொதுமக்களுக்கான இலவச கணிதப் பயிலரங்கு மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. திருச்சி மாநகரில் 1951ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 61 ஆண்டுகள் உயர்கல்வி வழங்குவதில் சரித்திரம் படைத்த இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூரில் சமூகநலத் தொண்டு புரிவதின் தொடர்ச்சியாக, 29-01-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று வில்கி சாலையில் அமைந்துள்ள கப்லன் உயர்கல்வி கழகத்தின் இரண்டாம் தளத்தில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை "சுய முன்னேற்றம் அடைதல்" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவசப் பயிலரங்கு ஒன்றை மிகச்சிறப்பாக நடத்தியது. சுமார் 100 பேர் கலந்துகொண்டு பயன்பெற்ற இப்பயிலரங்கை, 29 ஆண்டுகள் பயிலரங்குகள் நடத்துவதில் அனுபவம் பெற்ற இக்கல்லூரியின் முன்னாள் மாணவர், திரு. அப்துல் கரீம் நடத்தினார்.

சமூக ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் நோக்கில், "குடும்பதின விழா" ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளையும் இச்சங்கம் செய்து வருகிறது.

## சிண்டாவுடன் இணைந்து நடத்திய பெற்றோர்களுக்கான கணிதப் பயிலரங்கு

சிண்டாவும் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சிங்கப்பூர்





கிளையும் இணைந்து, 19-02-2012 ஞாயிற்றுக் கிழமை அன்று "உங்கள் குழந்தைகள் கணிதத்தில் சிறந்த மதிப்பெண்கள் பெற எவ்வாறு உதவலாம்?" என்ற தலைப்பில் பெற்றோர்களுக்கான கணிதப் பயிலரங்கை நடத்தின. இந்தப் பயிலரங்கின் முக்கிய நோக்கமாக பிள்ளைகளின் கல்வியில், குறிப்பாக கணிதப் பாடத்தில் பெற்றோர்களின் பங்கும், கற்பதற்கான சிறந்த சூழ்நிலையை எவ்வாறு அமைக்கலாம் என்பதனையும் பற்றிக் கணித விரிவுரையாளரும் முன்னாள் மாணவர் சங்கத்தின் உறுப்பினருமான திரு. அமானுல்லா விரிவாக விளக்கினார்.

சிண்டாவின் இருபதாம் ஆண்டு நிறைவை ஒட்டிய அறிக்கையின் கீழ், சமூகத்திலுள்ள பிற சமூக அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், கூடுதலாக மாணவர்களையும் பெற்றோர்களையும் சென்றடைய முடியும் என்பதை இந்தக் கணிதப் பயிலரங்கம் மெய்ப்பித்துள்ளது. 26 ஆண்டுகள் கணிதம் கற்றல் கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த திரு. அமானுல்லாவின் கணிதம் கற்றல் கற்பித்தல் தொடர்பான உத்திகளும் ஆலோசனைகளும் வந்திருந்த பெற்றோர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது.

இந்தப் பயிலரங்கில் கலந்து கொண்ட சிண்டாவின் STEP துணைப்பாட மாணவரின் தந்தையான திரு. ஷபீர் ஹுசைன், கணிதம் கற்றல் தொடர்பான பல முக்கியமான தகவல்களைத் தான் கற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார். இந்தியச் சமூகத்திலுள்ள ஏனைய பெற்றோர்களும் இம்மாதிரியான பயிலரங்குகளில் பங்கேற்று பயன் அடைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சிண்டா, எதிர்வரும் காலங்களில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் போன்ற பிற சங்கங்களுடன் இணைந்து பற்பல நடவடிக்கைகளில் ஈடுபட திட்டம் கொண்டுள்ளது. இம்மாதிரியான கூட்டு முயற்சிகளின் மூலம், இந்தியச் சமுதாயத்தில் பாலர் பள்ளியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்ச்சியையும் கணிதப் பாடத்தின் முக்கியத்துவத்தையும் அதிகம் வலியுறுத்த முற்படும்.